சிவமயம்

குமரகுருபரன்

மலர் 14] 1963-ஹு ஆனி-மீ 1ம் உ (15-6-63) [இதழ் 6

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை – 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	சிதம்பரச்செய்யுட்கோவை (கட்டுரை 69) ...	313
2.	குடந்தைக் காரோணம் என்பது சோமேஸ்வரர் கோயிலா? ...	319
3.	நீடூழி இலங்கிவாழி	321
4.	திருவெண்ணெய் நல்லூர்	323
5.	நீதிநெறிவிளக்கம் (உரை நடையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் ...	331
6.	திருவருட்பயன்—தெளிவுரை ...	334
7.	Hymns of the Tamil Saivite Saints	337
8.	மனிதனின் தெய்விகம் ...	338
9.	நாளும் கோளும்	345
10.	இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி ...	351
11.	அவலச்சுவை	352
12.	உத்தரகோசமங்கையில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம் பாலிப்பு நிதி ரூ.5,000 ...	358

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 14 ‖ சோபகிருது-ஆனித் திங்கள் 1-ம்வ [15-6-63] ‖ இதழ் 6

சிதம்பரச் செய்யுட் கோவை

முதுபெரும் புலவர்

ஸ்ரீமத் சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவெண்காடு.

[கட்டுரை 69]

"மெய்த்துயரம் உயிர்க்குஎய்தும் விளையாட்டும் உலகீன்ற
அத்திருவுக் கிலை;அதுவும் அவர்பொருட்டே யாம்அன்றே."

படைப்பும், காப்பும், அழிப்பும், மறைப்பும், அருள்வும் ஆகிய ஐந்தொழிலும் இறைவனுக்கு விளையாட்டு என்றலும் ஆம். இதனை முற்கட்டுரையில் நன்கு விளக்கியிருக்கின்றவாறு, அதனை உணர்ந்தார் அறிந்திருக்கலாம். போகமும் மோக்கமும் வழங்குதற்பொருட்டும் அருளால் மும்மலங்களையும் துடைத்தற் பொருட்டும் இறைவன் ஐந்தொழில் இயற்றுகின்ருன். சித்தி

யாரில் முதற் சூத்திரப் பகுதியில் "சொன்ன இத் தொழில்கள் ....சொல்லலாமே." என்னுந் திருவிருத்தத்தை நோக்கி இவ்வுண்மையை அறிக.

இறைவனுக்கு விளையாட்டு; உயிர்க்குப் பெருந்துன்பம். பிறவி என்பது உடம்புறுதல். இறவி உடம்பு நீங்குதல், படைத்தல் உயிர்க்கு உடம்பைக் கொடுத்தல். அது கடவுட்கு விளையாட்டு. உயிர்க்குப் பெருந்துன்பம். இவ்வாறே ஏனைத் தொழில்களிலும் ஆண்டானுக்கு விளையாட்டும் ஆவிகட்குப் பெருந்துன்பமும் ஆதலை உய்த்துணர்க. அருள்மட்டும் அதற்கு விலக்கு. படைப்பை மட்டும் நோக்கின், உடம்பை எய்தும் துயரம் ஆதல் விளங்கும். மெய்த்துயரம் என்பது மெய்யால் (உடம்பால்) ஆகும் துயரம் என்றும், மெய்யை அடையும் துயரம் என்றும் பொருள்தரும். எய்தும்-எய்துவதற்குக் காரணமாகிய, விளையாட்டு-படைப்பு முதலிய தொழில்கள்.

உலகீன்ற திரு-'ஜகதம்பா'; 'லோகமாதா' என்னும் திருப்பெயர்களை நோக்கி யுணர்க. 'உலகன்னை' என்றலும் வழக்கு. அவ்விளையாட்டு அவ்வன்னைக்கு இல்லை; அன்னை பெறும் உயிர் (மக்)களுக்குரியனவாய்ச் செய்யப்படும் இறைவன் விளையாட்டே யாம். அவர் என்பது ஆன்மாக்களைக் குறித்தது. பொருட்டு - பொருளை யுடையது. அவர்பொருட்டு - அவர் (பொருளாதல் உடையது) காரணம் ஆகும்,

"படைப்பாதித் தொழிலும் பத்தர்க்கு அருளும் பாவனையும் நூலும்
இடப்பாக மாதராளோடு இயைந்துயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானும் அதுவும் முத்தியளித்திடும் போகும் பாசம்
துடைப்பானுந் தொழிலும்"

என்ற சிவாகம வசநத்தில், 'பத்தர்க்கு' 'உயிர்க்கு' என்றவற்றை உணர்ந்தால், உலகீன்ற திருவுக்கு இல்லை; எல்லாம் அவர் பொருட்டே என்றது இனிது விளங்கும்.

'உலகீன்ற திரு' என்றது 'சுற்றுநெடுநேமிச் சுவர்' என்றும் 'கும்பாதி காரியம்' என்றும் தொடங்கும் இருவேறு பிள்ளைத் தமிழ்ப் பாக்களிலும் ஆசிரியர் உணர்த்தியவாற்றால் அறியப்படும்.

'இன்னருளே மன்னுயிர்கட்கு எத்தொழிலும் ஈன்றெடுத்த
அன்னைமுனி வதும்தனயர்க்கு அருள்புரிதற்கே அன்றே.'

எத்தொழிலும் மன்னுயிர்கட்கு இன்னருளே; அத்தொழில் ஐந்து. அவை முற்கூறிய படைப்பு முதலியன. அவற்றுள் மூன்ருவது தொழிலுட் சார்வது அன்னையின் கோபம் அழித்தலும் அருட்டொழிலே எனின், அதில் அடங்கும் கோபமும் அருளாகாமல் வேறு யாதாகும்? அருள் அருளாதலில் தடையில்லை. ஐயமும் இல்லை, படைப்பும் காப்பும் மறைப்பும் கூட அருள் எனக்கொள்ளப்படலாம். அவ்வினைகளில் உயிர்க்கு இன்பம் உளது. அழித்தலில் இன்பம் உண்டாதல் உயிர்க்கு ஏது. அஃது எப்படி அருளாகக் கருதப்படும்? இது கேட்டற் குரியதே.

"அழிப்பு இளைப்பாற்றல்; ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல்; நுகரச் செய்தல் காப்பது; கன்மவொப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பு; அருட்செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு; பார்த்திடின் அருளே எல்லாம்."

என்னும் சித்தியாரில் 'எல்லாம் அருளே' என்னும் உண்மையை விளக்கியது காண்க. (1) அழிப்பாகிய இளைப்பாற்றலும் இன்பம் பயக்கும் சார்பால் அருளாயிற்று. (2) படைப்பு வினைகளைப் போக்குதல் ஆதலின், வினை நீக்கம் இன்பந்தருவதே. (3) காப்பு அவரவர் வினையின் பயனை அவரவர் நுகர்வதும் அவ்வாறு நுகர்ந்து வினையைக் கழிப்பதும் இன்பம் பயவாமல் துன்பமா பயக்கும்? (4) இருவினை யொப்புவர மலபரிபாகம் உண்டாக்குதல் மறைப்பு ஆயின் இன்பம் ஒன்றே விளையும், அதனால் துன்பம் என்றும் தோன்ருது. (5) அருள் பந்தத்தை நீக்கி முத்தியை நல்குவது. முன்னைய நான்கும் அருளாதல் வெளிப்படை. அதனால், 'இன்னருளே மன்னுயிர்கட்கு எத்தொழிலும்' என்றது முன்னோர் கண்டறிந்த மெய்யநுபவ விடயம் ஆகும்.

அநுக்கிரகம் நிக்கிரகம் இரண்டும் ஈசன் செயல். அக்கிரமம் புரியும் உயிர்களுக்கு அவ்வக்கிரமகருமம் பக்குவமாகி அநுபவிக்கவரும் (தீவினைப்)பயன் துன்பமேயாகும். ஆதலின், அத்துன்பப்பயனைத் தடுத்து, இன்பப்பயனை எய்துவித்தல்

பெற்ற தாயின் கடனாகும். இதம்புரிவோர்க்கு அநுக்கிரகமும் அகிதம் புரிவோர்க்கு நிக்கிரகமும் செய்தல் ஈசன் ஒருவனுக்கே உரியதொழில்.

“நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது
அக்கிரமத்தால் குற்றம் அடித்துத் தீர்த்து அச்சம்பண்ணி
இக்கிரமத்தினாலே ஈண்டு அறம இயறறிடு எனபன்;
எக்கிரமத்தினாலும் இறை செயல் அருளே என்றும்.”

என்ற சித்தியாரில் இவ்வுண்மை இனிது விளங்குதல் காண்க.

‘ஈன்றெடுத்த அன்னை முனிவதும் தனயர்க்கு அருள் புரிதற்கே’ என்ற உண்மையைக்கூட, சித்தியாரில் அன்னைமுனிவு என்னாது அப்பன் முனிவாக வைத்து, இவ்வாறே அருள் எனக் குறித்த வாற்றை அறிக.

“தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம் சொல்லாற்றின்
வந்திடாவிடின் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடின் பரிவே யாகும்
இந்த நீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும்”

என்னும் இச் சித்தியாரில், ‘புதல்வர்கள்’ ‘தந்தையாய்’ ‘ஈசனார் முனிவு’ எல்லாம் பார்த்திடின் பரிவேயாகும் என்ற வாற்றை உட்கொண்டு நோக்கின், மன்னுயிர்கட்கு எத் தொழிலும் இன்னருளே, ஈன்றெடுத்த அன்னை முனிவதும் தனயர்க்கு அருள் புரிதற்கே என்றுள்ள இயல்புகள் தெளிவாகும். தனயர்-புதல்வர்; மக்கள் (ஆண் பெண் எல்லாம்). “நஞ்சனைய சிந்தை நமன்தூதர் வெஞ்சினத்தால் அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டு நிற்க வல்ல கருணை மறம் போற்றி” என்பது போற்றிப் பஃறொடை.

“எவ்வுருவும் நின்னுருவும் அவள்உருவும் என்றன்றே
அவ்வுருவும் பெண்ணுருவும் ஆணுருவும் ஆயவே.”

முதற் (காரணப்) பொருள் ஆணும் பெண்ணும் ஆக அமைந்து அர்த்தநாரீசுவர வடிவம் உடைய (காரணத்)தால் தான், உலகங்களில் உள்ள பொருள் எல்லா வற்றிலும் ஆண் பெண் காணப்படுகின்றன. அவற்றிற்கு இயைந்த உறுப்புக்களும் காணப்படுகின்றன.

"சத்தியும் சிவமும் ஆயதன்மை இவ்வுலகம் எல்லாம்
ஒத்துஒவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியும்ஆகி
வைத்தனள், அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்."

என்பது சித்தியார்,

"யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே–"

என்பது திருக்களிற்றுப் படியார்.

எவ்வுருவும் நின்னுருவு, எவ்வுருவும் அவளுருவு. எவ்வுருவும் நின்னுருவும் அவளுருவும் என்றன்றே ஆயவே. அவ்வுரு என்பது எவ்வுருவு எனப்பட்ட வினு எழுத்துடன் கூடிய சொல்லால் விளங்கியதே. அகரச்சுட்டு நின்னுரு என்று கூறப்பட்ட ஆணுருவையும் அவளுருவு எனப்பெற்ற பெண்ணுருவையும் குறிப்பது. எவ்வுருவும் ஆயவே என்றியைத்துப் பொருள் கூறலாம்.

"நின்னலா தவள்இல்லை அவளலால் நீஇல்லை
என்னில் நீயே அவனும் அவளுமாய் இருத்தியால்"

இதன் கருத்தை முன்னரே சிவஞான சித்தியாரில், சிலரேனும் அறிந்திருப்பர். அஃது இஃது.

"அருளது சத்தியாகும் அரன்றனக்கு; அருளை இன்றித்
தெருள் சிவம் இல்லை; அந்தச் சிவம் இன்றிச்சத்தி இல்லை,
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்கு அளிப்பன்; கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்".

என்னும் திருவிருத்தத்தின் முன்னீரடியில் உள்ளதொடு இக் கண்ணியை முன்னீர்!

அருள் சத்தி, அச்சத்தி அல்லால் நீ இல்லை. நீ அல்லால் அச்சத்தி இல்லை. நீயே அவனுமாய் இருத்தி, அவளுமாயிருத்தி.

"ஒன்றதாய் இச்சா ஞானக்கிரியை என்றொரு மூன்றாகி நின்றிடும் சத்தி,' என்னும் சிவஞானசித்தி வசநத்தால் ஒரே சத்தி பலவேறு பிரிவுறுதலை அறியலாம்.

"ஒருவனே இராவணுதி பாவகம் உற்றுற் போலத் தருவன் இவ்வுருவம் எல்லாம்' தன்மையும் திரியாளுகும், வரும் வடி வெல்லாம் சத்தி; சத்திதான் மரமும் காழ்ப்பும் இருமையும் போல மன்னிச் சிவத்திேைடியைந்து நிற்கும்" என்பதில், சிவமும் சத்தியும் குணிகுணம் போல்வதோர் இயல்புடையன. ஆஞல், குணுதீதப் பொருள், அவனும் அவளும் என்றது உபசாரம். உண்மையில் அச் சொற்கள் அப்பரம் பொருளை யுணர்த்தவல்லன அல்ல.

'சத்திதன் பேதம் எல்லாம் நின்மலன் தாளுத் தோன்றி நிலைமை ஒன்றுயே நின்பன்' என்றதும் அறிக.

அதனுல்,

தந்தையும் தாயும் நீயே, சுற்றமும் அயலும் நீயே,
உள்ளமும் உணர்வும் நீயே; சீவனும் யாவும் நீயே,

என்று,

மனம் குழைந்து நெக்கு நெக்கு உருக நின் தூக்கிய திருவடியை நோக்கிக் கைகுவித்துத் தலைதாழ்த்திப் பணிகுதும், மும்மலம் பொதிந்த பூரண அசுத்த தேகத்தில், அஞ்ஞானத் தால் அகங்காரம் உற்று இருக்கும் இத்திய நிலைமை ஒழிந்து, அழியாத நித்தியாநந்த வாழ்க்கையைப் பெறும் பொருட்டுப் பணிகுதும்,

"தந்தைநீ தாயும்நீ தமரும் பிறரும்நீ
சிந்தைநீ உணர்வும்நீ சீவன்நீ யாவும்நீ"

எனவாங்கு,

"நெஞ்சகம் குழைந்து நெக்குநெக் குருகநின்
குஞ்சித சரணம் அஞ்சலித்து இறைஞ்சுதும்
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையில்
செம்மாந் திருப்பது தீர்ந்து
மெய்ம்மையிற் பொலிந்த வீடுபெறற் பொருட்டே"

(தொடரும்)

குடந்தைக் காரோணம் என்பது சோமேஸ்வரர் கோயிலா?

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான், திரு. சுந்தரரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலை நகர்.

கும்பகோணம் என்னும் குடந்தையில், கும்பேஸ்வரர் கோயில், நாகேஸ்வரர் கோயில், காசிவிஸ்வநாதர் கோயில் என்னும் மூன்று தேவாரம் பெற்ற தலங்களும், சோமேஸ்வரம் என்னும் ஒரு வைப்புத் தலமும் இருக்கின்றன.

இவைகளுள் கும்பேஸ்வரர் கோயில் திருக்குடமூக்கு என்றும், நாகேஸ்வரர் கோயில், குடந்தைக் கீழ் கோட்டம் என்றும், அந்தந்தக் கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளன. காசிவிஸ்வநாதர் கோயில் குடந்தைக் காரோணம் ஆகும் என்பது ஆன்றோர் வழக்கைத் தவிர, கல்வெட்டால் உறுதிப்படுத்த அக்கோயிலில் கல்வெட்டு இல்லை. சிலர் மகாமகக்குளத்தின் கீழ்க் கரையிலுள்ள அகத்தீஸ்வரர் கோயில்தான் காரோணம் என்கின்றனர். அதிலும் கல்வெட்டு இல்லை. வேறு பலர் குடந்தையில் சார்ங்கபாணி பெருமாள் கோயிலுக்குத் தென்பாலுள்ள சோமேஸ்வரர் கோயிலே காரோணம் எனக்கொண்டு, காரோணப்பதிகப்பாடல் ஒன்றையும் சலவைக் கல்லில் பொறித்துப் பதிப்பித்திருக்கின்றனர். இந்தச் சோமேஸ்வரம் தான் காரோணமா? என்று ஆராயுமிடத்து அக்கோயிலில் பள்ளியறை நாச்சியார்க்கு எதிரிலுள்ள தூண் ஒன்றில்,

ஸ்வஸ்திஸ்ரீ கோராஜ கேஸரிவன்மற்கு யாண்டு ரு-வது வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவதானந் திருக்குடமூக்கிற் திருசோமீஸ்வரத்து ஆழ்வார்க்குக் கட்டுவாகஞ்சாலை

குறிப்பு:- *இக்கோயில் கல்வெட்டை 1932 சித்திரை மாதத்தில் படித்து எழுதினேன், கல்வெட்டுத் துறையாளர் இன்னும் இதைப் படியெடுத்திலர்,*

நூதுவனும்.......என்று தொடங்கும் ஒரு கல்வெட்டு செதுக்கப் பெற்றுள்ளது. இதன்படி இக்கோயில் திருசோமேச்சரம் என்னும் வைப்புத்தலமாகும். இதை அப்பர் பெருமான் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் பத்தாம் பாசுரத்தில் "தோணிபுரந் துருத்தி சோமீச்சரம்" என்று பாடியுள்ளனர். ஆனால் இக் கோயிலுக்குரிய பதிகம் கிடைத்திலது; ஆதலால் இது வைப்புத் தலமாகும். இக்கல்வெட்டில் இறைவர் "திருசோமீஸ்வரத்து ஆழ்வார்" – என்று குறிக்கப் பெற்றுள்ளார். திருக்காரோணம் உடையார் என்று குறிக்கப் பெற்றிலர். எனவே இக்கோயில் திருக்காரோணம் ஆகாது என்பது உறுதி. இக்கல்வெட்டில் சிவபெருமானின் திருப்பெயர் "சோமீஸ்வரத்து ஆழ்வார்'– என்று குறிக்கப்பெற்றிருப்பது போல, ஆடுதுறை ஆபத்சகாயர் கோயில் இறைவர் 'திருக்குரங்காடுதுறை ஆழ்வார்' (S. I. I. vol. III Part III Ins. No. 144 Page 294) என்றும், திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயில் சிவபெருமான் திருவொற்றியூர் ஆழ்வார் (S. I. I. vol III, Part III Ins. No. 145 Page 295) என்றும் குறிக்கப் பெற்றமை ஈண்டு நினைவில் வைக்கத் தக்க தொன்றாம்.

சோமனால் (சந்திரனால்) பூசிக்கப் பெற்றமையின் இக்கோயில் சோமேச்சரம் என்னும் பெயர் பெற்றது. இது பல்லவ மன்னரால் கட்டப் பெற்ற பழமைவாய்ந்த கருங்கல் கோயில் ஆகும். இக்கோயில் கர்ப்ப இல்லின் பின் புறச்சுவரின் நடுப் பகுதியில் அர்த்த நாரீசுவரர் திருமேனி இருப்பதே இது பல்லவ மன்னரால் கட்டப்பெற்றது என்பதற்குச் சான்றாகும்.

'நீடூழி இலங்கி வாழி'

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்,
கல்யாண நகர், சென்னை-28.

தொழும்பருக்கே அருள்காசி மடாலயத்தின்
இளவரசாத் துலங்கிச் சைவப்
பழம்பழுக்கப் பணிசெய்யும் முத்துக்கு
மாரப்பேர் பரித்த தூயோய்
தழும்பிருக்க இறைவனையே அணைத்தகா
மாட்சியுறை தருகாஞ் சிக்கண்
செழும்பொருள்சேர் தேவார விழாஎடுக்கும்
பத்திரிகை சேர்ந்த தாலோ! (1)

பொருப்பனசை வப்பணியாற் பெறுபுண்ணி
யப்பயனைப் போற்றி ஏற்கும்
திருப்பனசைக் காசிமடம் சிவம்வளர்க்கத்
தமிழ்வளர்க்கத் திகழு மென்றே
விருப்பம்நசை யுற்றுயரும் அன்பரெலாம்
போற்றுகின்றார்; வேட்டுக் கேட்டே
இருப்பன்அசை வின்றிப்பல் லறம்வளர்க்கும்
அருணந்தி இசைதான் என்னே! (2)

அருந்தமிழிற் பெரும்புலவன் துறவரசன்
காசிதனில் அயல்மன் னன்றன்
இரும்பனஉள் ளங்குழைத்த பேராளன்
குமரகுரு பரனும் எம்மான்

விரும்பறமெல் லாமவன்றன் மரபில்வரு
வோர்வளர்த்தல் வியப்பன் றேகாண்;
கரும்பயிலக் கூலிதரு பரம்பரைய..
தென்றெவரும் கழறு வாரே. (3)

அத்தகைய விழுப்பமுறு திருமரபில்
நீஇளவ லாகி இன்று
சுத்தமனம் தூயஉரை நற்செயல்கள்
பூண்டிருந்து சுடர்தல் கண்டேன்
அத்தனரு ளால்வந்த பேறென்றே
மனங்குளிர அன்பு செய்தேன்,
எத்திசையும் புகழ்மணக்க அறம்வளர்த்து
நீடூழி இலங்கி வாழி! (4)

"சைவம்"

சென்னை சிவனடியார் திருக்கூட்டத்
திங்கள் வெளியீடு

ஆசிரியர். திருக்குறள் பீடம். அழகரடிகள்

ஆண்டு சந்தா ரூ. 3/-

M. R. சம்பந்தம்,
C/o. R. தாஸன் ஸ்டுடியோ,
ரட்டன் பஜார்,
சென்னை-3.

முகவரிக்கு M. O. அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

திருவெண்ணெய் நல்லூர்

டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள்

இது தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஒரு சிவத்தலம். இது பண்ணுருட்டிக்கு மேற்கே 15 கல் தொலைவிலும், விழுப் புரத்திலிருந்து 12 கல் தொலைவிலும், திருக்கோவிலூரிலிருந்து 14 கல் தொலைவிலும், உள்ளது.

தலச் சிறப்பு :

கி. பி. 9 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த சுந்தரர்க்கு இவ் வூருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிற்றூரில் திருமண ஏற்பாடு செய்யப்பட்டது. திருமணத்தின்போது சிவபெருமான் ஒரு கிழ வேதியனுகத் தோன்றினுர்; சுந்தரரும் அவர் முன்னேரும் தமக்குப் பரம்பரை அடிமைகள் என்றும் வழக்காடினுர். அவ்வூர் மறையவர் அவர் இருக்கும் இடத்தைக் கேட்டனர். சிவபெரு மான் மறையவரையும் சுந்தரரையும் தமது இடத்தைக் காட்டுவ தாக அழைத்துச் சென்று ‘அருள் துறை’ என்னும் கோவிலுள் நுழைந்து மறைந்தார்.

வந்தவர் சிவபெருமானே என்பதை யுணர்ந்த சுந்தரர் திரு மணத்தை மறந்தார்; இறைவன் கருணையை எண்ணி உருகினுர்; இறைவனே அடியெடுத்துக் கொடுக்கப், “பித்தா பிறைசூடி” என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினுர் என்பது பெரிய புராணச் செய்தி யாகும். [1] இவ்வரலாற்ருல் இத்தலம் கி. பி. 9 ஆம் நூற்ருண்டிலிருந்து சைவ உலகில் சிறந்த பெயர் பெற்றுள்ளது.

---

[1] *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 27-74.*

‘சைவம்’ இதழில் வெளிவந்துள்ள இக் கட்டுரை, ஆசிரியர் அனு மதியுடன் வெளியிடப்பெறுகின்றது.

கல்வெட்டுக்கள் :

இத்தலம் அப்பர், சம்பந்தரால் பாடப்பெறவில்லை. சுந்தரர் ஒருவராலேயே பாடப் பெற்றது. அதனால் இத்தலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டுமுதல்சிறப்புற்றதுஎனலாம். இத்திருக்கோவிலில்113 கல்வெட்டுக்கள் இருக்கின்றன.[2] சுந்தரர்வரலாற்றோடு தொடர்பு கொண்டமையால் பேரரசர்களும் சிற்றரசர்களும் பொதுமக்களும் இக்கோவிலைப் பலவழிகளிலும் சிறப்பிக்கத் தொடங்கினர்; மணிமண்டபங்களைக் கட்டினர்; விமானங்களைப் புதுப்பித்தனர்; பல திருமேனிகளையும், நாயன்மார் படிமங்களையும் எழுந்தருளச் செய்தனர்; அவற்றுக்குப் பூசைகளும் விழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தனர்; கோவிலில் விழாக்களும் பூசைகளும் குறைவின்றி நடக்கப் பல ஊர்களிலும் நிலங்களை அளித்தனர்; நகைகளையும், பாத்திரங்களையும் வழங்கினர்; நந்தவனங்களைத் தோற்றுவித்தனர்; இங்ஙனம் பல திருப்பணிகளைச் செய்தனர். இவற்றைத் தெரிவிக்க எழுந்தவையே இக்கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள்.

அரசர்கள் :

இங்குள்ள கல்வெட்டுக்களுள் சோழர் காலத்தன பலவாகும். பல்லவர், சம்புவராயர், பாண்டியர் கல்வெட்டுக்கள் சில; விசயநகர வேந்தர் கல்வெட்டுக்கள் சில. அவற்றை முறைப்படி கீழே காண்க :

பராந்தகன் I	கி. பி. 907——953
இராசராசன் I	கி. பி. 985—1014
குலோத்துங்கன் II	கி. பி. 1113—1150
இராசராசன் II	கி. பி. 1146—1171
குலோத்துங்கன் III	கி. பி. 1178—1218
கோப்பெருஞ்சிங்கன் (இராசராசன் III காலம்)	கி. பி. 1216—1246
இராசேந்திரன் III	கி. பி. 1246—1279
சடையவர்மன் வீரபாண்டியதேவன்	கி. பி. 1253—1268
விக்ரம பாண்டியன்	கி. பி. 1268—1281

[2] *420-512 of 1921.*

இராசநாராயண சம்புவராயன்	கி. பி. 1337
மகாமண்டலேசுர வீரபூபதி உடையார்	கி. பி. 1411
விசயராய மகாராயர்	கி. பி. 1446
விருபாட்சராயர் II	கி. பி. 1465—1485
குமார மல்லிகார்ச்சுன ராயர்	கி. பி. 1485
கிருஷ்ணதேவமகாராயர்	கி. பி. 1509—1530
வீரநரசிங்க மகாராயர்	கி. பி. 1555

இக் கல்வெட்டுக்களை நோக்க, இக் கோயில் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு முதல் 16-ஆம் நூற்றுண்டு முடிய-ஏறத்தாழ அறு நூறு ஆண்டுகள் சிறப்புற்றிருந்தமை தெளிவாகும். இலக்கியச் சான்றையும் ஏற்றுக் கொள்ளின் இக் கோயில் கி. பி. 9-ஆம் நூற்றுண்டு முதல் 16-ஆம் நூற்றுண்டு வரை-ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகள் நல்ல நிலையில் இருந்தமை அறியலாம். இனி, இக்கோயில் கல்வெட்டுக்கள் உணர்த்தும் செய்திகளைக் காண்போம்.

விளக்கு அறம் :

இக்கோயிலில் காலைமாலைச் சந்திகளில் விளக்குகள் எரிக்கப்பட்டன. நந்தா விளக்குகள் பலவும் எரிக்கப்பட்டு வந்தன. விளக்குகள் எரிக்க 32 பசுக்கள் அல்லது 96 ஆடுகள் வழங்கப் பட்டன. எனவே, ஒரு பசு 3 ஆடுகளுக்குச் சமம் என்பது அக்காலக் கணக்காகும். பசுக்களின் இனம் தொடர்ந்து பெருகி வருவதற்கு அவற்ருேடு எருதும் கோவிலுக்கு வழங்கு தல் வழக்கமாக இருந்தது. அக்காலத்தில் மக்கள் தங்கள் நலனுக்கும் தங்கள் குடும்ப நலனுக்கும் விளக்கெரிப்பதாக நேர்ந்துகொண்டு இந்த அறங்களைச் செய்து வந்தனர். ஒருவன் தன் குருட்டு மனைவியின் நலனுக்காக ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகள் வழங்கினுன் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.[3]

நில அறம் :

1) சோழ குல மாதேவியார் என்ற அரசியார் ஒரு நந்தா விளக்கு எரிக்க ஆருயிரம் குழி நிலம் வழங்கினுர்.[4]

[3] *426 of 1921* [4] *427 of 1921*

2) பெருமூர் பராயிதன் உத்தமசோழமாராயன் திருவெண்ணெய் நல்லூர்ச் சபையாரிடம் சில நிலங்களை விலைக்கு வாங்கினான்; வாங்கிய அதனைக் கோயிலுக்குத் தானம் செய்தான்.[5]

3) ஒரு நந்தவனம் வைத்து நடத்த ஐந்நூறு குழிநிலம் 25 பணத்திற்குக் கொடுக்கப்பட்டது. தோட்டக்காரருக்கு ஊதியம், உடைகள், மண்வெட்டி முதலியன கொடுக்கப்பட்டன.[6]

4) கோவிலிலிருந்த தெய்வத் திருவுருவங்களுக்கு முன்பு 18 சந்தி விளக்குகள் எரிக்க ஒருவன் 9½ மா புன்செய் நிலத்தை விட்டான்; நந்தவனம் வைக்க எண்ணூறு குழி நிலம் விட்டான்.[7]

5) விக்கிரம பாண்டியன் சேந்தமங்கலப்பற்றைச் சேர்ந்த மேலூரை, 'வீரபாண்டியன் சந்தி' என்னும் சிறப்புப் பூசைக்காக வரியிலித் தேவதானமாக விட்டான். மேலூர் எல்லைகளுள் ஒன்று காடவராதித்தன் பெருவழி என்பது.[8]

(6) விக்கிரம பாண்டியன் தன் தமையனான குலசேகர பாண்டியன் பெயரில் அமைந்த குலசேகரச் சதுர்வேதி மங்கலத்துப் பிராமணர்க்குத் தன் தமையன் பெயரால் நிலதானம் செய்தான்; நடுவில் மண்டலத்தில் குரட்டூர், இருந்தை, குறும்பூர் என்னும் ஊர்களில் உள்ள நிலங்களை 114½ பங்குகளாகப் பிரித்தான்; நான்குமா நன்செய் நிலமும் ஒரு மா புன்செய் நிலமும் ஒரு பங்காக அமைந்தன; குலசேகர ஈசுவரத்திற்கும் குலசேகர விண்ணகத்திற்கும் தனித்தனி இரண்டு பங்குகள் கொடுத்தான்; 'விக்கிரம பாண்டியன் சந்தி'க்காக வசதியும் செய்தான்.[9]

(7) கிருஷ்ணதேவராயர் சிவன் கோயிலிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலிலும் 'கிருஷ்ணதேவராயர் சந்திக்'காகவும் கோயிலைப் பழுது பார்க்கவும் 35 மா நன்செயும், 20 மா புன்செயும் சர்வமான்யமாக வழங்கினார்.[10]

---

[5] *429* of *1921* [6] *430* of *1921* [7] *447* of *1921*
[8] *458* of *1921* [9] *462* of *1921* [10] *469* of *1921*

பிற அறங்கள் :

(1) இக்கோயில் ஆட்சியை ஊர் அவையார் கவனித்து வந்தனர். இறைவன் படையலின் ஒரு பகுதியை அவரது திருமுழுக்கிற்கு நீர் இறைப்பதும் சங்கு ஊதுவதும் செய்துவந்த ஒருவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஊர் அவையார் ஏற்பாடு செய்தனர்.[11]

(2) கூடல் ஆளப்பிறந்தான் அரசநாராயணன் என்ற காடவராயன் தடுத்து ஆட்கொண்ட தேவருக்குக் கோயில் நிலங்கள் சிலவற்றின்மீது விதிக்கப்பட்ட வரிகளைத் தானமாக வழங்கினான். இச்செயல் அவனுடைய நலத்திற்கும், அவனுடைய தம்பி ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன் என்ற காடவராயன் நலத்திற்கும், அவனது குடும்ப நலத்திற்கும் விடப்பட்டது[12]

(3) நடுவன் (மத்தியஸ்தன்) செஞ்சி உடையான் ஸ்ரீ கயிலாயமுடையான் "பித்தன் என்று பாடச் சொன்னான்" என்னும் பெயர் கொண்ட வெள்ளி ஊதுகொம்புகளையும் சிலம்பு ஒன்றையும் உதவினான்.[13]

(4) கோப்பெருஞ்சிங்கன் கோயில் நிலங்கள் சிலவற்றை வரியிலியாக ஆக்கினான்; அவ்வரிகளை இறைவனுக்குப் பழத் தோட்டங்கள் வைத்து வளர்க்கச் செலவிட்டான்; பொன் வேய்ந்த சோழமங்கலத்தில் இருந்த கோயில் நிலங்களுக்கு நீரைப்பாய்ச்சிய ஊற்றுக்காலிலிருந்து சில கமுந்தோப்புக்களை வளர்க்கும்படி ஏற்பாடு செய்தான்.[14]

(5) இறைவனுடைய பால் முழுக்குக்காகப் பலர் நான்கு பசுக்கள், இருபது பசுக்கள், முப்பத்திரண்டு பசுக்கள் வீதம் கோயிலுக்கு வழங்கினர்.

(6) ஊரவையார், ஆலாலசுந்தரப் பெருமான் என்ற கன்னடியனுக்குக் 'கடியார சேத்திரம்' என்னும் பெயரில் இரு

[11] *420* of *1921* [12] *423* of *1921* [13] *432* of *1921*
[14] *432*, *433* of *1921*

மாநிலத்தை வழங்கினர்; இரண்டு நாழி பிரசாதத்தையும் ஒரு மணியையும் வழங்கினார்கள். (கடியார க்ஷேத்திரம் – மணி சொல்லுவதற்காகக் கொடுக்கப்பட்ட நிலம்).[15]

(7) கடவுள் முழுக்கிற்காகக் கூடல் அரச நாராயணன் ஆளப்பிறந்தான் என்ற காடவராயன் 50½ கழஞ்சு நிறை கொண்ட வெள்ளிக் குடத்தை வழங்கினான்.[16]

(8) கோவிலுக்குத் தெற்கே இருந்த குளத்தை விருபாட்சர் அமைச்சரான நஞ்சணரின் தமையன் பழுதுபார்த்தான். அரச நாராயணன் என்ற காடவராயன் கோபுர வாயிலைக்கட்டினான்.

சிறப்புச் செய்திகள் :

(1) நாட்டில் இருந்த பெருவழிகளுக்குப் பல பெயர்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று காடவர் ஆதித்தன் பெருவழி என்பது. அது திருவெண்ணெய் நல்லூரில் அப்பெயரைப் பெற்றது. (2) அவ்வூரில் பல தெருக்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று, ஆலாலசுந்தரப்பெருந்தெரு என்பது[17] (3) சிவபெருமான் சுந்தரரை வழக்காடி வென்ற நிகழ்ச்சி கோயிலுக்கு வெளியே நடை பெற்றது இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அந்த இடம் ஒருவருக்கு உரிமையாய் இருந்து வந்தது. ஊர், அவையார் அம்மனையில் 'வழக்கு வென்ற திருஅம்பலம்' கட்டினர்; அம் மனைக்குப் பதிலாக மனையின் உரிமையாளருக்குக் கோவிலுக்குச் சொந்தமான மனை ஒன்று விடப்பட்டது[18] (4) தடுத்தாட் கொண்ட நல்லூர், செங்காதன் குளத்தூர் எனப் பல ஊர்கள் கோயிலுக்குச் சொந்தமானவை.

(5) இராசநாராயண சம்புவராயன், கோயில் படையலுக் காகச் சில வரிகளை வழங்கினான்; மீன் குத்தகை வருவாயைக் கொண்டு குளங்களைப் பழுது பார்க்கும்படி ஆணை பிறப்பித் தான்[19]

(6) வழுதிலம்பட்டு இராச்சியத்துக் கைக்கோளர், அறம் வளர்த்த நாயனார் காலத்தில் பல்லக்கில் செல்லுதல், சங்கு

---

[15] *460* of *1921* [16] *467* of *1921* [17] *435* of *1921*
[18] *441* of *1921* [19] *454* of *1921*

ஊதுதல் போன்ற உரிமைகளைப் பெற்றிருந்தனர்; இடையில் அவற்றை இழந்துவிட்டனர். குமார மல்லிகார்ச்சுனர் காலத்தில் கி. பி. 1485-இலிருந்து மீண்டும் அவ்வுரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.[20]

இறைவன் திருப்பெயர்கள் :

சிவன் கோயிலில் பண்டாரம் இருந்தது. திரு அருள் துறை ஆழ்வார், ஆட்கொண்ட தேவர், உடையார் தடுத்தாட் கொண்ட நாயனர், தடுத்தாட்கொண்டருளிய தம்பிரானர், தடுத்தாட்கொண்டருளிய நாயனர் என்பன இறைவன் திருப் பெயர்கள்.

அளவைகள், நாணயங்கள் :

குழி, மா என்பவை நில அளவைகள். தூணி, பதக்கு, உழக்கு, நாழி என்பவை முகத்தலளவைகள். கழஞ்சு என்பது வெள்ளியையும் பொன்னையும் அளக்கும் நிறுத்தலளவை. பொன், பணம், குளிகை என்பன தனித்தனி நாணயத்தின் பெயர்கள். வீரசம்பன் குளிகை என்பது ஏறத்தாழக் கி. பி. 1236-இல் அரசனயிருந்த வீரசம்பன் என்பவனால் வெளியிடப் பட்டது[21]. அது பிற்காலத்திலும் வழக்கில் இருந்தது.

சிற்றரசர்கள் :

திருவெண்ணெய் நல்லூருக்கு அண்மையில் திருக்கோவலூர் மலையமான்கள், சேந்தமங்கலம் காடவராயர்கள் சிற்றரசர்களாய் இருந்தனர். சவ்வாது மலைநாட்டைச் சம்புவராயர்கள் ஆண்டு வந்தனர். இவர்கள் அனைவரும் திருவெண்ணெய் நல்லூர் சிவன் கோவிலுக்குப் பல அறங்களைச் செய்து உள்ளனர்.

ஊர்ப் பெயர்கள் :

திருவெண்ணெய் நல்லூர் பிராமணர்க்கு விடப்பட்டது; அதனால் பிரம்மதேயம் என்னப்பட்டது. அது திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்தது[22]. இராசஇராச வளநாட்டுத் திருமுனைப்

[20] *478 of 1921* [21] A. R. E. 1921, p. 109. [22] 423 of 1921.

பாடி நாட்டுப் பிரம்மதேயமான திருவெண்ணெய் நல்லூர் என்பது கல்வெட்டு வாசகம். இராசராச சதுர்வேதி மங்கலம், இராசேந்திர சோழநல்லூர், வீரபாண்டிய நல்லூர், விக்கிரம பாண்டிய நல்லூர், சேரன் மகாதேவி சதுர்வேதி மங்கலம் என்பன அரசர் பெயர்களையும் அரசியர் பெயர்களையும் தாங்கி யிருத்தலைக் காண்க.

மக்கள் பெயர்கள் :

ஆலால சுந்தரப் பெருமாள், *திரிபுவனமுடையார், இலங்கேசுவரதேவன், சூரிய நாராயணன், கோபால செட்டி, திருமலை அழகியான், வீரர்கள் வீரன், செய்ய சாமந்தன், காங்கேயன், அரச நாராயணன், வீரசேகரன், குலசேகரன், அம்மையப்பன், கண்ணுடைப் பெருமாள், நாற்பத்தெண்ணாயிர நம்பி, மலைமேல் மருந்து சிங்கம், ஏழிசை மோகன், இருள் நீக்கி என்பன அக்கால மக்கள் பெயர்கள்.

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

திருஞான சம்பந்தர் தேவாரம்

[புதிய பதிப்பு]

பிலவ வருட வைகாசி மூல வெளியீடு

832 பக்கங்கள் கொண்டது, உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

★ பிரதி ரூ. 2-75 ★

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம் — (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 5-ன் தொடர்ச்சி]

கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க—ஒவ்வொருகால்
எண்மைய னேனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னன்.

அரசன் சிற்சில வேளைகளில் எளிமையை உடையவனு யிருந்தாலும் அவன் அரியவனே ஆவான். அம்மம்ம! அவன் கண்ணோட்டம் இல்லாதவன், உள்ளடங்கிய சினத்தை உடைய வன். ஆதலின் நமக்கு வேண்டுமென்று நாம் விரும்பிய வற்றை அவன் ஏற்றுக் கொள்ளும் செவ்வியை அறிந்து கொள் ளாமல் அவனிடம் சொல்லுதல் கூடாது.

Of Knowing the proper time

Do not express your desire to a king, without knowing the opportune time, in the belief that he is very much under your influence; for though he may be easy of access at times, how difficult it would be to manage, when he is devoid of mercy and burning with inward rage? 46

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே இறைமாண்டார்க் கேதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு.

Translated by: Sri P. Mutharasu M. A. B., T., Lecturer in Tamil, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar Srivaikuntam.

அரசர் கோபங் கொள்வாராயின் பழைய நட்புடைமையைக் கருத மாட்டார்; உறவையும் பார்க்க மாட்டார்; இவைபோன்ற வேறுள்ள உரிமைகளையும் நினைக்க மாட்டார்கள். அரசுமாட்சி யுடையவர்களுக்குளவர்களிடத்திலேனும் காதன்மை இருக்குமா? அவர்களுக்குப் பகைவரும் நட்டாரும் இல்லை.

The King's wrath

When the kings' grow enraged, they never remember old acquaintance; they never regard intimate friendship and they do not acknowledge blood or other relationship. What affections, the princes have in their rage? They know neither foes nor friends. 47

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாட்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்.

நாம் அரசருடைய அரண்மனைப் புறவாயிலை யாதொரு பயனும் பெறுமல் பலநாட்கள் காத்துக் கொண்டிருந்தும் எந்த நல்ல பயனைப் பெற்று விட்டோமென்று எண்ணி அதனை இகழா தொழிக. பல மிகுதியான நாட்கள் அங்ஙனம் அரண்மனை வாயிலைக் காத்திருந்த தெல்லாம் முடிவிலே சென்று ஒரு காலத்தில் அரச சபையில் மற்ற எல்லோரையும் காட்டிலும் சிறப்புற்றிருக்கும்படி செய்து விடும்.

The reward for continued service

Do not despair as having waited fruitlessly for long at the gates of the king; for your long and continued service will stand in good stead to raise you to dignity in the Royal court, ultimately. 48

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றல் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில.

பிணியால் நலிந்து உடலை விட்டுப் பிரிந்து போகக் கூடிய நிலையிலிருக்கும் உயிருக்கும் ஆயுளை நீடிக்க வைக்கின்ற மருந்தை வாயினுள்ளே செலுத்துதல் குற்றமாகாது. அது ஒரு வேளை நன்மையைச் செய்தலும் கூடும். அதுபோலச் சில காரியங்கள் முதலில் முடியாதவை போல இருந்து பின்பு இடைவிடாத முயற்சியினால் முடிந்து விடுவனவாகவும் உள்ளன. அதனால் உறுதி பயப்பனவற்றிற்குரிய நன் முயற்சிகளை முதலில் முடிவடையாது போயினும் இறுதிவரை அறிஞர்கள் விடாது செய்து கொண்டே இருப்பார்கள்.

Persistent Perseverance

The wise will persevere to the last, in anything good, even though they are not hopeful of achieving their object to their satisfaction. It is not a fault to administer medicine to the dying person; for there are things which appearing impossible at the outset, become possible in the end. 49

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்னார்—மயலாயும்
ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்று
ஏற்றார் எறிகால் முகத்து.

காற்றின் முன்னே நிற்கும் ஆற்றலில்லாத விளக்கை ஊழ்வினையின் உண்மையை இதனாற் சோதித்து அறிந்து கொள்ளுவோமென்று வீசுகின்ற காற்றுக் கெதிரே மயங்கியேனும் ஒருவரும் ஏற்றமாட்டார்கள். அது போல எவ்வகைப் பட்ட முயற்சியையும் செய்யாமலேயே இருந்து விட்டு, முயற்சியின்மையால் ஊழ்வழிப்பட்டு வரத்தக்க நன்மைகள் வாராமற் போகா என்று அறிவோர்கள் சொல்லமாட்டார்கள்.

The dignity of effort

The wise will not remain quiet with the excuse that the decisions of fate will not be affected by their indolence. However ignorant, none will light a lamp in the face of violent wind, merely to test the power of destiny. 50

(தொடரும்)

திருவருட் பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 14. இதழ் 4-ன் தொடர்ச்சி)

பதி முது நிலை.

இத் தொடர் பதியினது முதுமையான நிலை என விரியும். இறைவன் உயிரினோடு அநாதியாகவே அத்துவிதமாக நிற்கும் நிலையினை இத் தலைப்பின் கீழ் விளக்கப்படுதலின் இது பதி முது நிலை எனப்பட்டது.

1. அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து.

(தெ - ரை) அகரமாகிய உயிர் எல்லா எழுத்துக்களிலும் பொருந்தி வேறற நின்றாற் போல தன்னிகரில்லாத் தலைமை வாய்ந்த இறையும் உலகுஉயிர் முழுதும் ஒழிவற நிறைந்து ஞான உருவாய் நிலைபெறும் என்பதாம்.

அகரம் தனித்தும், ஏனைய உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் இவற்றோடு வேறன்றிப் புணர்ந்தும் இயங்க வல்லது. அதுபோல முதல்வனும் தனித்தும், ஏனைய உயிர் உலகுடன் வேறன்றிப் புணர்ந்தும் இயங்கவல்லவன். அகரம் ஏனைய எழுத்துக்களுக்கெல்லாம் முதலாதல் போல இறைவனும் ஏனைய உயிர்களுக்கெல்லாம், முதல்வனுவன். எனவே இறைவன் உயிர்க்குயிராக விளங்குபவன் என்பதும், அவனே எல்லா வுயிர்களுக்கும் முதல்வன் என்பதும் இவ்வுவமையால் விளங்கும். இறைவனுக்கு அகரம் உவமையாதல்,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு'
(திருககுறள்–கடவுள் வாழ்த்து–1)

'அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்'
(சிவஞான போதம்)

'அக்கரங்கள் தோறும், சென்றிடும் அகரம்போல நின்றனன்
சிவனும் சேர்ந்து'

என்றல் தொடக்கத்துத் திருவாக்குக்களாலும் அறியலாம்.

2. 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'

(தெ–ரை) எமது தலைவனுகிய இறைவன், தனது ஒப்பற்ற நிலையை நிலைபெற்ற உயிர்கள் யாவும் பொருந்தும்படி அருளுகின்ற சத்தியுடன் வேருகாதவன் என்பதாம்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவினனுயும், மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனுயும் இருப்பதே இறைவனின் நிலையாகும். அத்தகைய பெருநிலையை ஏனைய உயிர்களும் பெறுமாறு செய்வது அவனது அளவிறந்த கருணையே யாகும். அதுவே ஈண்டு அருட் சத்தி எனப்பட்டது. மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்கு வீடளிக்கும் இறைவனது பெருங்கருணையையே இப்பாடல் விவரிக்கின்றது. 'சத்திபின்னமிலான்' என்ற வாக்குடன், 'அம்மையோடப்பனுகிச் செறிவு ஒழியாது நின்ற சிவன்' என்ற திருவாக்கினையும் ஒப்பிட்டு மகிழலாம். மன்னுயிர்-நிலைபெற்ற உயிர். 'மன்னுயிரோம்பி' எனப்பிறரும் இங்ஙனமே குறித்தல் காண்க.

3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்.

(தெ-ரை) எல்லாமாய் அல்லவுமாய் இருப்பதால் பெருமைக்கும், எத்தகைய நுண்ணிய பொருள்களிலும் கலந்து விளங்குவதால் நுண்மைக்கும், எல்லா உயிர்களிடத்தும் கொண்டிருக்கும் அளவிறந்த கருணையால் பேரருட்கும்,

தன்னறிவதனுல் காணும் தகைமையன் அல்லன் ஆதலின் அவனைப் பெறுதற் கருமைக்கும் இறைவன் ஒப்பில்லாதவன் என்பதாம்.

" அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் "

என்னும் திருவாசகப் பகுதியும் இதனோடு ஒப்பிட்டுணர்தற் குரியது.

4. ஆக்கி எவையும் அளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்.

(தெ-ரை) எல்லா உயிர்களையும் தோற்றுவித்துக் காத்து, அவ்வுயிர்கள் மீண்டும் பிறத்தற்கு ஏதுவாம் மலமாகிய குற்றத்துடன் அவற்றை ஒடுக்குபவனே உயிர்களுக்கு நீங்காத புகலிடமாவன் என்பதாம்.

ஆசு - குற்றம்; அது ஈண்டு மலத்தைக் குறித்தது. காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் கூத்தனே உயிர் களுக்குப் புகலிடமாவன் என்பது கருத்து.

5. அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவும் உடையா னுளன்.

(தெ-ரை) அருவும், உருவும், அருவுருவும், அறிவுக் கறி வாக விளங்கும் ஞானவடிவும் உடையவனே இறைவன் என்ப தாம்.

சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் அருவத் திருமேனிகள். மகேசுவரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கும் உருவத் திருமேனிகள். சதாசிவன் என்பது அருவுருவத் திருமேனி. இங்ஙனம் நவந்தரு பேதமாக ஏக நாதனே நடிப்பன் என்பது கருத்து.

(தொடரும்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 5-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

31. உறுகயிறூசல்போலவொன்றுவிட்டொன்றுபற்றி
மறுகயிறூசல்போலவந்துவந்துலவுநெஞ்சம்
பெறுகயிறூசல்போலப்பிறைபுல்குசடையாய்பாதத்
தறுகயிறூசலானேனதிகைவீரட்டனாரே.

THE SOUL'S BITTER CRY

31 My fickle heart one love forsakes,
And forthwith to some other clings;
Swiftly to some one thing it sways,
And e'en as swiftly backward swings.
O Thou with crescent in Thy hair,
Athihai Virattanam's Lord,
Fixed at Thy feet henceforth I lie,
For Thou hast broken my soul's cord.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.
(N.B. Copies available for sale at the above Press.)

மனிதனின் தெய்விகம்

திரு. ஆர். நடராசன் அவர்கள் எம். ஏ., எம். லிட்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் 'மனிதனே' மிக முக்கியப் பொருளாகக் கருதப்படுகின்றான். கடந்த நூற்றாண்டுகளில் கடவுளோ, சமயமோ, சமயப்பெரியார்களோ முக்கிய இடம் பெற, இன்று மனிதனே முக்கிய இடம் பெறுகிறான். விஞ்ஞானத்தின் அல்லது கலையின் எந்தப் பிரிவை எடுத்துக்கொண்டாலும் அதனால் என்ன பயன் என்று வினவுகின்றான். 'கலை கலைக்காகவா அன்றி வாழ்விற்காகவா' என்ற சொற்றொடர் அடிக்கடி நம் காதில் விழுகின்றது. சுவாமி விவேகானந்தரும் மனிதனைப் பற்றிப் பேசினார்; மனிதனோடு தொடர்புகொண்ட பிறவற்றைப் பற்றியும் பேசினார்; மனிதனின் தெய்விகத்தை எடுத்துக் காட்டினார்.

இந்நூற்றாண்டை விஞ்ஞான உலகம் என்று சொல்லலாம். அதாவது விஞ்ஞானம் ஓங்கி வளர்வதால் இவ்வாறு சொல்லலாம் என்பதன்று; மனிதன் எதனையும் ஆராய்ந்து முடிவுசெய்வதனால்தான் இவ்வாறு சொல்லலாம். மனிதன் எதனையும் உடனே நம்புவதில்லை; தக்க காரண காரிய நியதிகளுடன் நிரூபித்துக் காட்டப்பட்டால்தான் நம்புகின்றான். ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்றாரன்றோ வள்ளுவரும். ஸ்ரீராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் மதத்தை இந்நூற்றாண்டிற்கு ஏற்ற வகையில் உருவாக்கித் தருவதற்காகவே அவதரித்தனர் என்று தோன்றுகின்றது. 'சமயம் என்பது மனிதனுள் இருக்கும் தெய்விக சக்தியைப் பரிமளிக்கச் செய்வதே' என்று வரையறுக்கின்றார் சுவாமிகள். மேலும், அஞ்சாமை, தியாகம், தன்னடக்கம், தொண்டு ஆகிய பல நற்பண்புகளையும் போதிக்கின்றார்.

சுவாமிகள் 'உடலே நாம் என்று கருதுவதால் துன்பம் ஏற்படுகிறது' என்ற கருத்தைப் பல இடங்களில் வலியுறுத்தி இருப்பினும் உடலை 'இன்னல் தரும் இழிகருவி' என்றும், 'இடும்பைக் கொள்கலம்' என்றும் வெறுக்கவில்லை. அவர் உடல் என்பது தூல உருவத்தில் காட்சி தரும் மனம் என்கின்றார். 'ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொள்ள ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கருவியே உடல்' என்றும் கூறுகின்றார். ஆன்மா தன்னையே வெளிப்படுத்திக் கொள்ள ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கருவியை எங்ஙனம் வெறுக்க இயலும்? மேலும் எல்லா உடல்களும் இறைவனது ஆலயங்களே என்ற கருத்து உடையவர்சுவாமிகள். எனவே ஆண்டவனது திருக்கோயில்களை இழித்துக்கூறுவாரா? எனினும் அவர் 'உடல் நமது பகைவன்; துணைவனும் ஆவான்' என்று குறிப்பிடுகின்றார். முதற்கண் எப்போது உடல் துணை ஆகும் என்று பார்ப்போம். சுவாமிகள் ஓரிடத்தில் 'இறைவன் தன்னையே நேசிக்க விரும்பினான்;எனவே பல ஆன்மாக்களாகப் பிரிந்து நின்று நேசித்துக் கொண்டான்' என்று குறிக்கின்றார். ஆகவே எல்லா உடலும் இறைவன் ஆலயமே என்று உணர்ந்து இறைவனுக்கும் உயிரினங்களுக்கும் தொண்டாற்றி இறைவனை உடம்பினுக்குள்ளேயே காணும் போது உடல் நமக்குத் துணையாகின்றது. பின் வரும் பாக்கள் இக்கருத்தை விளக்குகின்றன.

"உடம்பினால் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்."
"எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்
றெவ்வுயிர்க்கும் அன்பா யிரு."

திருமூலரும் உடம்பினைத் தாம் முன்னர் இழிவென்று கருதினாலும், உடம்பில் உத்தமன் உறைகின்றான் என்பது உணர்ந்த பின் அதனைப் போற்றியதாகப் பகர்கின்றார்:

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

சில பெரியார்கள் 'வெந்து விழும் உடற்பிறவி' என்று இதனை ஏன் இழித்துக் கூறினார்கள் எனின், இதனை உண்மை என்று மயங்கித் தீவினைகளைப் பெருக்கும்போது உடல் பகைவன் ஆகின்றது என்று பின்னர் அவர்களே குறிப்பிட்டுள்ளனர். உடல் துணையாவதும்,பகையாவதும் நம்மைப் பொறுத்துள்ளதே யன்றி உடலைப் பொறுத்ததன்று. எனவே, சுவாமிகள் 'உடலை நன்கு பேணுங்கள் என்றும், இந்தியாவிற்கு இப்போது மிகவும் தேவையானது இராஜச சக்தியே' என்றும் அறைகூவுகின்றார். அவர் தமது கடிதம் ஒன்றில் 'நாம் உடல் வலிமையை நன்கு பேணாததினாலேயே அந்நியர்க்கு அடிமையாகி அல்லலுற நேர்ந்தது என்று வருந்தி எழுதியுள்ளார்.

அவர் 'அஞ்சேல்' என அறைகின்றார். "நான் பாவி, பலமற்றவன், கேடுற்ற பதர், என்னிடம் சக்தியில்லை" என்று கூறுவது பெரும் பிழை என்று வேதாந்தம் விளம்புவதை எடுத்துக்காட்டுகின்றார். அஞ்ஞானம், வேற்றுமை பாராட்டல், ஆசை மூன்றுமே மனிதனின் துயரங்களுக்குக் காரணங்கள் என்று கருதுகின்றார். 'அச்சமே துயரத்தைத் தருவது அச்சமே மரணத்தைத் தருவது' என்று கூறி, 'நம்மில் ஒவ்வொருவரும் மன்னுதி மன்னராய் ஈசற்கு இளவரசாகும் உரிமையுடையோம்' என்கின்றார். அவர், நாம் தவறு செய்துவிட்டால் கூட அதற்காகக் கழிவிரக்கம் கொண்டே காலத்தைக் கழித்தலைக் கண்டிக்கின்றார். தவறுகளை மேலும் தொடர்ந்து செய்யாமலிருக்க நம்மைத் தூண்டுவதால் அவை நாம் அறியாமலேயே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்கின்றார். "மண்ணனிற் பாவம் செய்யாத மனிதர் ஒருவர் உண்டோ சொல், மண்ணிற் பாவம் செய்யாது வாழும் வாழ்க்கை எளிதோ சொல்" என்று உமர்கயாம் கேட்கின்றார். இதன் பொருள் நாம் விரும்பியவாறு பாவம் செய்யலாம் என்பதன்று. பாவம் என்பதுதான் என்னை? பிற உயிர்களுக்குத் தீங்கு புரிதல் அன்றோ? மண்ணிற் பிறந்தவர்க்கோ குற்றம் புரிதல் இயல்பாகிவிட்டது. நாம் அறிந்தோ அறியாமலோ பல தவறுகளைப் புரிந்து விடுகிறோம். அதற்காக நாம் கழிவிரக்கம் கொண்டு எதற்கும் தகுதியற்ற சோம்பேறி ஆகிவிடுவதால் என்ன பயன்? எனவே செய்த

தவறை மீண்டும் செய்யாமல் விழிப்புடன் இருப்பதாக உறுதி பூண்டு நமது குறிக்கோளை அடையத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதுவே உமர் கயாத்தின் கருத்து. திருவள்ளுவரும் 'எற்றென்றுஇரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று' என்கின்றார். இதன் பொருள்: எத்தகைய இழிவான காரியத்தைச் செய்துவிட்டோம் என்று பிறகு வருந்தத்தக்க செயல்களைச் செய்யாது இருத்தல் நல்லது; அப்படித் தவறிச் செய்துவிட்டாலும் அதற்காக வருந்திக் கொண்டிராமல் ஆனால் திரும்பவும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருத்தல் நல்லது.

மனிதன் இல்வாழ்வோனாகவோ அன்றித் துறவியாகவோ தான் இருத்தல் இயலும். விவேகாநந்தர் இரண்டின் இலக்கணத்தையும் நன்கு வரையறுத்துத் 'தத்தம் நிலையில் தாம் பெரியாரே' என்று முடிவு கூறுகின்றார். எவன் தன் பங்கிற்கு வந்த கடமையைச் சிரத்தையுடன் செய்து முடிக்கின்றானோ அவனே உண்மைக் கடவுள் பக்தன் ஆவான்.

"ஈன்றோர்ப் பேணி இனியன புரிந்து
வான்றோய் கடவுள் மலரடி நினைந்து
வாழ்க்கைத் துணைவி மகிழ்ச்சி மீதூரப்
பொன்போற் புதல்வரைப் போற்றி, அன்பாற்
சுற்றந் தழீஇ உற்றநட் பாளர்
வறியோர்க் குதவி மாண்பொரு ளீட்டி
ஆதுலர் சாலை யாதிய அறங்கள்
தீதில நிறுவிச் செறுநர்த் தடிந்து
நல்லோர் பரவும் நலத்தினனாக."

உள்ள இல்வாழ்வோருக்கும்,

"ஓடும் பொன்னும் ஒப்ப நோக்கி
மாதரைத் தாயென மதிக்கும்"

துறவிக்கும் ஏற்றத் தாழ்ச்சி இல்லை; தத்தம் நிலையில் தாம் பெரியாரே என்று சுவாமி தம் கருமயோகத்தில் கூறியுள்ளார்.

அடுத்து உண்மைத் துறவைப் பற்றிப் பேசும்போது காடுகள் புக்கும் தாழ்சடை வைத்தும் காய்கனி உண்டும் தடுமாறி

வாழ்வது துறவன்று என்றும், உலகத்தில் வாழ்ந்து கொண்டே அதில் பற்றற்று நிற்பதுதான் துறவு என்றும், உண்மை யோகி, பந்தங்களுக்கு வசமாகாமல் தன்னில் பிரபஞ்சத்தையும் பிரபஞ் சத்தில் தன்னையும் காண்பான் என்றும் குறிப்பிடுகின்றார். நம் தாய் தந்தையர் கடவுளல்லவா? மற்ற மனிதர்களும் கடவுளல்லவா? ஏனைய உயிரினங்களும் கடவுளல்லவா? நட மாடும் தெய்வங்களாகிய உயிர்களுக்குத் தொண்டு செய்வதை விடக் காட்டில் சென்று காண்பதற்கு யாதுளது? யாரும் தான் என்றும் தான் மட்டும் வீடு பெற வேண்டும் என்றும் விரும்பு வதை அறவே வெறுக்கின்றார் அவர். "மற்றவர்களுக்கு வீட்டின்பம் தருவதற்கு நீ நரகிற்குச் செல்லச் சித்தமாயிரு; நீ இறப்பதோ உறுதியாதலின் நல்ல காரியத்திற்காக இறப்பாய்" என்று அறிவுரை கூறுகின்றார். "பிறர்நல முணராச் சிறுமை யகற்றி, ஒப்புரவொழுகல் தக்கவர் நெறியே" என்று நமக்கு அறிவுறுத்திய விவேகாநந்தர் தாமே அந்நெறியில் வாழ்ந்து வழிகாட்டியவர் என்பதை யாரே மறுக்க இயலும்?.

மனிதன் தன் தெய்விகத்தை உணரச் சுவாமிகள் காட்டும் வழி என்ன என்றால் பற்றுடன் செயலாற்றக் கூடாது என்பதே. பற்றொடு செயல் செய்யின் உறுவது பந்தமல்லவா? 'பயன் கருதாப் பணி' என்பதுதானே கீதையில்கண்ணபிரானுர் போதித் திருப்பதும். நாம் 'நான்'என்ற அகங்காரத்துடன் செயலாற்றும் போதுதான் அதன்பலனாகிய பாவபுண்ணியங்கள் நம்மைப்பற்று கின்றன. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்று கூறி நம்முடைய செயல்களின் பலன்களை ஈசுவரனுக்கு அர்ப்பணித்துவிடின் பிறவிக்குக் காரணமாகும் பாவ புண்ணியங்கள் நம்மைப் பற்றா. அற்றது பற்றெனின் உறுவது வீடல்லவா? அவர் 'உயிர்களுக்குக் கருணையுடன் தொண்டாற்றல் நன்றே; ஆனால் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைவதை உணர்ந்து தொண்டாற்றுவதே மிகவும் சிறந்தது' என்று நவில்கின்றார். எனவே அவர் கருத்து 'நாம் நம் கடமைகளைச் செய்யவேண்டும்; உயிர்களுக்குத் தன்னலங் கருதாத் தன்மையில் தொண்டாற்ற வேண்டும்; நம்மைக் கருவி யாகக் கொண்டு இறைவன் செயலாற்றுகின்றான் என்று

உணர்ந்து பற்றற்ற நிலையில் பணிபுரிய வேண்டும்' என்பதாகும். கருமசாதனையின் இரகசியமும் இதுவே ஆகுமன்றோ?

விவேகானந்தர் தெய்வ பக்தியுடன் தேச பக்தியையும் நன்கு புகட்டுகின்றார். "தாழ் வகுப்பினரும் கல்லா மூடரும் ஏழைகளும் சக்கிலியரும் தோட்டிகளும் உனது உதிரக் கலப்புற்ற சகோதரரே என்பதை மறவாதே. துணிவுகொள்க; தீரனுகுக; நீ ஓர் இந்தியனுவது பற்றிப் பெருமை பூணுக. யான் ஓர் இந்தியன்; ஒவ்வோர் இந்தியனும் எனது சகோதரன் என்று பெருமையோடு பறையறைக" என்று போதிக்கின்ருர். "இந்தியா இறக்குமாயின் உலகத்தினின்றும் ஞானமனைத்தும் இல்லா தொழியும்; ஒழுக்க நிறைவெல்லாம் ஒழியும், சமயத்தின் மீது கொள்ளும் இனிய அனுதாபமெல்லாம் ஒழியும்; இலட்சிய உணர்ச்சி யெல்லாம் ஒழியும்; அவ்விடத்தே காமம், போகம் இரண்டும் ஆண்தெய்வமாகவும்,பெண்தெய்வமாகவும் அமர்நது அரசாளும்; பணம் பூசாரியாக, வஞ்சனையும் போட்டியும் பலாத்காரமும் கிரியைகளாக, மனித ஆன்மாவே பலியாக அமையும். இத்தகைய நிகழ்ச்சி என்றும் நேராது" என்று முழங்குகின்ருர். பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தன அல்லவா? அந்நியர் நம்மீது படையெடுத்துள்ள இந் நேரத்தில் சுவாமிகளின் உரைகள் நம் உள்ளத்தே வீரக்கனலை மூட்டுகின்றன.

அவர் பாரதத்தின் புகழ்பாடுவதுடன் நிற்கவில்லை. சமூகத்தில் உள்ள பல மூடப் பழக்க வழக்கங்களையும் கண்டிக்கின்ருர். மேற்றிசையாரைப் பின்பற்றும் மயக்கம், பெண்களுக்குமிக்க இளம் வயதிலேயே மணம் முடித்தல், சமயம் சமையலறையிலேயே இருப்பதாகக் கருதுதல் போன்ற பலவற்றை அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். அவர் மனித வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட எதைக் குறித்தும் பேசாது விட்டாரல்லர். இதனுல்தான் அவரது புகழ் உலகெங்கிலும் பரவி நிற்கின்றது. அவர் வெறும் தெய்வ பக்தியைப் பற்றி மட்டும் பேசாமல், மனித வாழ்க்கையின் எல்லாக் கூறுபாடுகளையும் கடவுள் பக்தியுடன் இணைத்துப் பேசியதால்தான்

போற்றற்கு உரியவர் ஆனார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்த அவரது புகழ் விரிப்பின் மிகப் பெருகுமன்றோ?

இவ்வாறு விவேகானந்தர் சொன்மாரி எனப் பொழிந்த சொற்பொழிவுகளில் காணப்படும் அறவுரைகளை விரிப்பின் அவை மிகப்பெருகும். அவை நேரு அவர்கள் குறிப்பிட்டவாறு இக்காலத்தினர்க்கு அருமருந்தாய் (Tonic) உள்ளன என்பதில் ஐயமில்லை. அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு நம்மை நாம் உணராமலேயே இருந்த நிலையில் அவதரித்து, 'விழிமின்; எழுமின்; குறிசாரும் வரை நில்லாது சென்மின்' என முழங்கித், தளர்ந்த நம்மைத் தட்டி எழுப்பினார். நமது பெருமைகளை அறியா நிலையில் இருந்த மேனாட்டினர்க்கும் நமது பெருமைகளையும் நமது சமயத்தின் பெருமைகளையும் அறிவுறுத்தினார். அவரே ஒரு கதையில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று 'நாம் ஆடுகள் அல்லோம்; சிங்கங்கள்' என்பதை உணருமாறு செய்தார். 'நீ பாவி அல்லை; அடிமையுமல்லை, சுதந்திரமான ஆன்மா; நீ இறைவனே ஆவாய்' என்றும், 'ஒவ்வோர் ஆன்மாவும் உண்ணிறைந்த தெய்வத்தன்மை உடையது' என்றும் அறிவித்த, சாலவும் உயர்ந்த ஞானாசிரியரே சுவாமி விவேகானந்தர் ஆவார். அவர் நமக்குத் தோன்றாத் துணையாயிருந்து வழிகாட்டும் வண்ணம் அவரது பொன்னார் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக.

திருக்கோவையார் புதிய பதிப்பு

★

(பேராசிரியர் உரையும் பழைய உரையும் கூடியது)

784 பக்கம் வெள்ளைத்தாள். அடக்கவிலை

தனிப்பிரதி விலை ரூ. 2-90

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு

20% கழிவு உண்டு

நாளும் கோளும்

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்
தலைமை அஞ்சலகம், பாண்டிச்சேரி

“நாளும், கிழமையும் நலிந்தோர்க்கில்லை,” “துணிந்தவனுக்குத் துயரம் இல்லை” என்பன போன்ற முதுமொழிகள் நம் நாட்டில் மிகவும் பிரசித்தம். நல்ல நிலைமையில் இருக்கும் போதுதான் நாள், கிழமை, நட்சத்திரம், நாழிகை முதலியவற்றைப் பலரும் கணித்துச் செயல்படுகின்றனர். வறுமை வந்துற்ருல் மனங்கசந்து நெறிதவறி நடப்பது இயல்பேயாம்; இருப்பினும் “வறுமையிற் செம்மை” காண்பவர் நற்குடியிற் பிறந்த ஒரு சிலரே. அன்னேர், நன்ருங்கால் நல்லவாக் கண்டு-அன்ருங்கால் அல்லல் படாதவர். மனத்திண்மை உடைமையால், ஊழி பெயரினும் தாம் பெயரார். ஆனல், பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும் வகையில் நம் முன்னேர் இராகு காலம் குளிகை, எமகண்டம் என தினசரி வாழ்க்கைக்கு நலம் பெற வழி வகுத்துள்ளனர். இது பற்றி எல்லா மதத்தினருக்கும் கருத்து வேற்றுமையே இல்லை என்னலாம்.

‘நல்ல காலம் பிறக்குமா?’ எனப் பொதுப்படப் பலரும், பேசுவது அறிந்ததே. ‘போதாத காலம்’ (Bad Time) என்றும் கூறிக்கொண்டு இன்னும் சிலர் ஏக்கமடைவர். அசோகன் ஆண்ட காலமும், குப்தர்கள் ஆண்ட காலமும் ‘பொற்காலம்’ எனப் புகழப்படுகிறது. ஒரு சமயம், பன்னீராண்டு தொடர்ந்து மழை இன்மையால் நம்நாடு வற்கடம் சென்றதாகவும், அதனுல் குடிமக்கள் வெவ்வேறு நாடு சென்று புக்கனர் என்றும் பழைய இலக்கியங்கள் பகர்கின்றன. காலச் சக்கரத்தை நல்ல காலமாகவும், கெட்ட காலமாகவும், மக்கள் தம் மனேபாவனையால் வகைப்படுத்தி உரைக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. தனியொருவர் வாழ்க்கையை வைத்துத்தான் நாளும், கோளும்

சிறப்பாய்க் கொண்டு கணிப்பது. எல்லாம் பொதுப்பட நாடு என்று பேசும்போதுதான் மேற் கூறியாங்கு 'பொற்காலம்' என்றும், 'கெட்டகாலம்' என்றும் எல்லார் வாழ்க்கையும் அடங்க உரைப்பது.

நாளும், கோளும் பார்த்துச் செயல்படாவிட்டால் தீயனவே விளையும் என்றும், பார்த்துச் செயல்படின் நல்லனவே விளையும் என்று யாவரும் நம்பி வருகின்றனர். இதுபற்றிய சான்றுகள் சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் மலிந்து கிடக்கின்றன.

"நின்று நிலைஇயர்நின் நாண்மீன்" — *புறம். 24*

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றுஎறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே." —*புறம்.112*

"நாள்அன்று போகிப் புள்இடை தட்பப்
பதன்அன்று புக்குத் திறன்அன்று மொழியினும்" —*புறம். 124*

"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர் பழியலர் அதனால்" — *புறம். 204*

"ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண்டு யாமும் பிறரும் பல்வேறு இரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்
நோயிலன் ஆயின் நன்றுமற்று இல்லென
அழிந்த நெஞ்சம் மடிஉளம் பரப்ப
அஞ்சினம்......................................." — *புறம். 229*

இவற்றால், நாளும், கோளும் பார்க்கும் பழக்கம் பண்டே உண்டு என்பது தெளிவாகிறது அன்றோ?

புண்ணிய தினத்தில் எல்லோரும் வந்து கடலில் நீராடுவர். மற்ற நாளில் வந்து நீராடார். நல்ல நாளின் மகிமை சொல்ல வொண்ணாது. இக்கருத்தைச் சிவப்பிரகாசர் 'கடலினும் மூழ்குவர் காலம் ஒன்றினே' என்று பிரபுலிங்க லீலையுள் கூறியுள்ளார்.

நாளும், கோளும் விதி வழி அமைவன என்பாரும் உளர். எல்லோருக்கும் ஒரு சேர முடிவு காலம் ஏற்படும் சமயத்திலும் விதியிருந்தால் அதிலும் ஓரிருவர் உயிர் பிழைப்பார்கள். இராமன் முடிசூடாமல் நகர் நீங்கி வனம் செல்லும் அமயம் எல்லா மக்களும் அழுதனர். ஆவும் அழுத; அதன் கன்று அழுத; அன்று அலர்ந்த பூவும் அழுத; கள் ஒழுகும் காவும் அழுத; பிள்ளை அழுத; பெரியோரை என் சொல்ல? இன்னும்,

"ஏழை தன்செயல் கண்டவர் யாவரும்
வீழும் மண்ணிடை வீழ்ந்தனர் வீந்திலர்
வாழும் நாள்உள என்றபின் மாள்வரோ
ஊழி பேரினும் உய்குநர் உய்வரே"

என்று கம்பர் பெருமான் உள்ளம் உடைந்து கூறுகின்றார்.

இராமனுக்கு நல்ல நாளும், நாழிகையும் வசிட்டர் முதலானவர்களால் நன்றாகக் கணிக்கப்பட்டு "நாளை முடிசூட்டு விழா" என யாண்டும் பறைசாற்றப்பட்டது. ஆனால் இராமன் அந்நாளில் முடிசூடாமல் கானகம் ஏகும்படி விதி அமைந்து விட்டது.

ஆனால், கைகேயி தன் மகன் பரதனுக்கு முடிசூட்டும் எண்ணத்தோடு அவனை வரவழைக்கத் தூதுவரை அனுப்பினாள். பரதன் தூதுவரைக் கண்டதும் அவர்கள் தந்த மூடுதோட்டின் முடங்கல் நிமிர்த்தினன். கோடிநிதியம் அவர்கட்கு ஈந்தனன் அவர்களை அனுப்பிவிட்டுப் பரதன், தம் முன்னைக் காணலாம் எனும் ஆசை கடாவ,

"எழுக சேனைஎன் றேவினன் எய்தினன்
தொழுது கேகயர் கோமகன் சொல்லொடும்
தழுவு தேரிடைத் தம்பியொடு ஏறினன்
பொழுதும், நாளும் குறித்திலன், போயினன்."

இதனால் பரதனுக்குத் தீயனவே வழியெல்லாம் தென்பட்டன. அரண்மனை வந்ததும், அவன் அதிர்ச்சியடையும் படியான நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது.

மேற்கூறியவற்றால் நாளும், கோளும் பற்றிய சில பிரச்சினைகள் எழக் காணலாம். பரதன், நாளும், நாழிகையும் பார்க்காமல் புறப்பட்ட காரணத்தினால் தீமை விளைந்தது. ஆனால், இராமனுக்கு நாளும் கோளும் நன்றாகப் பார்த்திருந்தும் தீமையே விளைந்தது. பின்வரும் இன்னுஞ் சில சான்றுகளைக் கொண்டு ஒரு முடிவுக்கு வர முயல்வோம்.

பண்டைத் தமிழர்கள், போர்த் தொடக்கத்தில் விரிச்சி கேட்கும் பழக்கம் இருந்துவந்தது. இதற்கு நற்சொல் கேட்டல் என்று பொருள்; நல்ல சகுனம் என்று இப்போது சொல்லுவதும் அஃதே. பெண்டிர்க்கு இடக்கண் துடித்தலும், ஆண்களுக்கு வலக்கண் துடித்தலும் நல்ல சகுனங்கள் என்பர். இவை யெல்லாம் பொது விதி; ஆனால் நாளையும், கோளையும் கணிப் பவர்கள் சோதிடநூல் வல்லார்தாம். அவர்களே அதில் பயிற்சியுடையார். நாம், கண்கூடாகக் காணும் நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் நாளும், கோளும் பார்ப்பது மிகவும் அவசியமே என்பது தெளிவாகும்.

இன்றேல், எல்லா நாட்டினரும், திருமணம், திருவிழா போன்ற நற்காரியங்கட்கு 'ஓர் நல்ல நாள்' என்று எதற்குப் பார்த்தல் வேண்டும்? அசம்பாவிதமாக ஏற்படும் மரணம், ஆபத்து இவை போன்ற தீய நிகழ்ச்சிகளுக்கு யாரும், நாளும், கோளும் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இக்காரியங்கட்கு அடுத்து என்ன நடத்த வேண்டுமோ, அதைத்தான் உடனே கவனிப்பது அறிவுடைமையாகும். ஆபத்தான நிலைமையில் இருக்கின்ற ஒருவனுக்கு உடனே வைத்தியம் செய்யாமல், நல்ல நாளும், நாழிகையும் பார்த்துக் காத்திருப்பார்களானால் அன்னோரது மதியீனத்தை என்னென்போம்? இறந்த ஒருவனைத் தகனம் செய்யவோ, அடக்கம் செய்யவோ பெரும்பாலும் நாளும், கோளும் பார்பதாய்த் தெரியவரவில்லை. முக்கியமானவர்களின் வருகைக்குத்தான் காத்திருப்பார்களேயொழிய நல்ல நாளுக்கும் நல்ல நாழிகைக்கும் என்று காத்திருக்கவே மாட்டார்கள். இவற்றால், நல்ல காரியங்கட்கும் எதிர்காலத்திற்குந்தான் நாளும், கோளும் பார்ப்பது பொருத்தம் என்பது வெளிப்படை.

இறைவனிடம் மிகவும் பக்தி பூண்ட அடியார்களில் சிலர் உள்ள உறுதியுடன் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று கூறியதாக அறிகிறோம். அவர்கட்கு மற்ற எவரைப்பற்றியும், எதைப்பற்றியுமே கவலை இல்லை. நல்லனவும் தீயனவும் பற்றி எண்ணுவதே கிடையாது. உதாரணமாக மாணிக்கவாசகர்,

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே?"

என்றும், அபிராமபட்டர்,

"நன்றே வருகினும், தீதே விளையினும் நான்அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கேபரம்" என்றும்

ஞானசம்பந்தர்,

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்து—என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல,
அடியாரவர்க்கு மிகவே
ஒன்பதொடொன் றொடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே"

என்றும் கூறியுள்ள வாக்குகளை நோக்குழி அன்னோரது மனத் திட்பமும், இறைப்பற்றுந்தான் நாளையும், கோளையும் மதியா மைக்குக் காரணம் என அறியலாம்.

"நாளென் செயும், கோள்தான் என்செயும்?" என்று அருணகிரிநாதர் ஓரிடத்தில் கூறிய வீறு மொழியையும் ஈண்டு நினைவு கூர்தல் நலம்பயக்கும். இவ்வடியார்போல்

இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டால் நாளையும், கோளையும் பற்றிய கவலை இல்லை. அங்ஙனம் இல்லாமையால் தான் நம்மில் பலரும் பயந்து, பயந்து செயல்புரிகின்றனர். சில மாதங்கட்கு முன்பு கூட உலகிற்கே ஊழிக்காலம் வந்து விட்டது என எண்ணி யாண்டும், கோளறுபதிகம் ஓதினர்; கோயில்கள்தோறும் சிறப்பொடு பூசனைகள் நடத்தினர். மக்கள் உள்ளங்களில் எப்படியோ நாளும், கோளும் பற்றிய பயம் இருந்து கொண்டே இருக்கிறது. இதனை மாற்ற முயல்வோர் செய்கை, மெய்யாகவே,

"காணுதான் காட்டுவான் தான்காணுன், காணுதான்
கண்டானும் தான்கண்ட வாறு"

என்ற குறட்படி அறிவுடைமைப்பாற் படாமற் போய்விடுமாயின் வியப்படைவதற்கில்லை.

இராகம் : சக்ரவாகம். தாளம் : ஆதி.

பல்லவி

உன்னடி பணிந்திடல் சிலாக்கியமே
என்ன புண்ணியம் செய்தேனென் பாக்கியமே (உன்)

அனுபல்லவி

கன்ம வினைகள் நீங்க கவலைகள் போக்கிட
பன்னிருகையனே பழனி வாழ் முருகனே (உன்)

சரணம்

முன்னம் ஈசனுக்குபதேசம் செய்வித்த பாலா
மின்னும் தோகை மயில்மேல் ஏறிடும் குணசீலா
குன்றம் குடிகொண்டிடும் குமரனே அருள்வேலா
பொன்னியாம் வள்ளி தெய்வயானை மருவும் தேவா. (உன்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 14. இதழ் 5-ன் தொடர்ச்சி]

பற்றியே தர்க்கம் — பலவாய்ச்செய் தொந்தரையால்
ஒற்றியில் சென்றே — ஒளிக்கலுற்ற சற்குருவே. 21

பச்சையப்பன் பள்ளியினில் — பண்டித சபாபதிமால்
இச்சையுற்றுக் கேட்டற் — கிணங்கியருள் சற்குருவே. 22

மனுமுறைகண்ட — வசனமதை யார்க்கும்
அநுகூல மாக — அளித்தருளும் சற்குருவே. 23

வேலாயுத மானின் — வித்தையறியக் கொணர்ந்த
நூலார் பிழைகள் — நுவன்றருளும் சற்குருவே. 24

சொன்னபிழை நன்கோர்ந்தே — சோர்வுற் றடிவணங்கி
நன்னயமாய்த் தான்படிக்க — நண்ணவருள் சற்குருவே. 25

கற்பாருபய கலாநிதி — வித்வா னென்னும்
பொற்பார் பெயரைப் — புகன்றருளும் சற்குருவே. 26

படிப்புத் தொழிலிற் — பகர் சுந்தரற்கே
அடிப்பதுநன் றல்லஎன்மேல் — ஆணையென்ற சற்குருவே. 27

தொண்டமண்ட லஞ்சரியாம் — சொல்லதற் கிலக்கணத்தை
விண்டவொரு நற்புலமை — மேதகவென் சற்குருவே. 28

குருபரம் பரப்ரபாவம் — கொள்ளுமொரு நூலை
அரும்வைணவர்க்கே — யருளியஎன் சற்குருவே. 29

சமயகுரு முவரையும் — சாமிகளென் றேதல்
அமையுமே நாயனுர் — அல்லவென்ற சற்குருவே. 30

(தொடரும்)

---

*திரு, ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்கள் இயற்றியது.

அவலச்சுவை

திருமதி. ந. சாந்தநாயகி அவர்கள், B. A.,
ஓடத்துறை (P. O.)
ஈரோடு.

பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் எட்டுமெய்ப்பாடு களில் ஒன்ருக அழுகையைக் கூறுகிறது. இதனையே பிற் காலத்தில் அவலம் என்று கூறினர். நமது வாழ்க்கையிலே துன்பமான ஒரு செயல் ஏற்படின் அது அவலமாகும். ஆனல் அதுவே கலையுலகில் வரும்போது சுவையாக, அவலச் சுவையாக மாறிவிடுகின்றது.

வாழ்க்கையிலே துன்பத்தை ஏற்றுக்கொள்ள ஒருவரும் ஒருப்படமாட்டார்கள். ஆனல், அதற்குமாருக அது கலைவடிவு பெறும்போது எவரும் வெறுப்பதில்லை, விரும்பிப் படிக் கின்றனர், பார்க்கின்றனர், கேட்கின்றனர். துன்பநாடகம், பாட்டு முதலியவை மக்களின் உள்ளத்தைக் கவர்வதுபோல் இன்பநாடகமும் பாட்டும் கவர்வதில்லை.

"The sweetest songs are those that tell us their saddest thoughts" என்ற ஆங்கில அறிஞரின் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும்.

இளங்கோவடிகளின் படைப்பாகிய சிலப்பதிகாரம் முழு வதுமே சிறப்புற்றிருந்தாலும் மதுரைக் காண்டந்தான் பலரா லும் திரும்பத் திரும்ப விரும்பிப் படிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் அவலச் சுவையே. ஐயையின் உதவிகொண்டு தன் கைவல்ல அளவிலே சமைத்து முடித்துக் கண்ணகி தன் கணவ னுக்குப் படைக்கிருள். அப்பொழுது கோவலன் "வறுமொழி யாளரொடும் வம்பப் பரத்தையரோடும் சேர்ந்து வீண்காலம் போக்கி, இருமுது குரவருக்குச் செய்யவேண்டிய கடமையி

லிருந்து வழுவியதோடு மட்டுமன்றி உனக்கும் தீங்கினை இழைத்தேன். அப்படியிருந்தும் நீ எழுகென எழுந்தாய். இதன் காரணமென்னை?" என வினவுகிருன். இதற்குக் கண்ணகி கூறும்பதில் நம்மனத்தைக் கவர்கிறது.

" அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னைநும்
பெருமக டன்ளெடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனளு
அற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
ஏற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்
வாயன் முறுவற் கவருள்ளகம் வருந்தப்
போற்ரு வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ருவுள்ள வாழ்க்கையே னுதலின்
ஏற்றெழுந் தனன்யான்."

எனக் கூறுகிருள். கோவலன் பிரிந்ததால் தனக்கு ஏற்பட்ட துன்பத்தினை மறைமுகமாக எடுத்துரைக்கிருள். "போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்" என்ற ஒரு சொற்ருெடரிலேயே கோவலன் செய்த அவ்வளவு குற்றங்களையும் சொல்லிவிடுகிருள். அது போலவே "மாற்ருவுள்ள வாழ்க்கையேன்" என்பதிலே தனக்கு கோவலனிடத்திருந்த மாருத அன்பினையும், தன்னுடைய தூய்மையான உள்ளத்தையும் எடுத்தியம்புகிருள். கோவலன் முன்னர்க்கூறிய "சிறுமுதுக் குறைவி" என்பதைத் தன்னுடைய பதிலிலே மெய்ப்பித்துக் காட்டிவிடுகிருள். தன் மனத்திலே அடக்கி வைத்திருந்த துன்பத்தினையெல்லாம் அப்படியே மடைதிறந்தாற்போல் கொட்டிவிடுகிருள். கோவலன் செய்த குற்றத்திற்காக அவனைக் கொடுஞ் சொற்களால் திட்டவில்லை; மென்மையான சொற்களாலேயே ஆனுல் வருத்தம் தோய்ந்த முறையிலே கூறுகிருள். கண்ணகி, கோவலனைத் தான்செய்த குற்றத்திற்காக வருந்தச் செய்வதோடு மட்டுமன்றி, நம்மையும் அவளுடைய நிலைக்கு இரங்கச் செய்கிருள்.

"பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
எங்கணு என்னு இனைந்தேங்கி மாழ்குவாள்.

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ."

என்று துன்பமாலை அடிகள் கண்ணகியின் அவலநிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன. இவ்வரிகளைப் படிக்கும்போது நம்மையும் அறியாது நம் கண்ணில் நீர் வந்து விடும். வாழ்விலே இத்தகைய துன்பம் நேரிட்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் முயற்சி செய்வோம். ஆனால் இது கலையாக இருப்பதால் திரும்பத் திரும்ப மேன்மேலும் படிக்கிறோம். துன்பத்திலே இன்பம் பிறக்கச் செய்யும் இக்கலையை என்னென்பது?

இதற்குக் காரணம் வாழ்விலே வரும் துன்பம் மன ஒருமைப் பாட்டைக் குலைப்பதும், கலையில் உள்ள துன்பம் மன ஒருமைப் பாட்டை விளைவிப்பதுமே யாகும். டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் "இலக்கிய ஆராய்ச்சி" என்னும் நூலிலே கூறியுள்ள கருத்தும் சிறப்புடைத்தாக இருக்கிறது. நமக்குத் துன்பம் நேரிடின் அதனை நம் நண்பரிடம் கூறி மனச்சுமையைக் குறைக்க முயலுவோம். அதுபோலவே புலவர்கள் தங்கள் துன்பத்தைத் தாம்படைத்த தலைவன் தலைவியர் வாயிலாக வெளியிட்டுக் குறைக்க முயல்கின்றனர் என்கிறுர்.

கம்ப ராமாயணம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கம்பர் தன்மகனைப் பிரிந்த சோகத்தால் தான் தசரதன் இராமனைப்பிரிய நேரும் இடத்தை மிக உருக்கமாகப் பாடியிருக்கிறுர் என்பர். விசுவாமித்திரர் தசரதனிடம் அரக்கரை யழித்தற்கு, இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்கிறுர். அதனைக்கேட்ட தசரதனின் வருத்தத்தை,

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான்"

என்ற பாடல் அழகாக விளக்குகிறது. தசரதன் அடைந்த துன்பத்திற்குக் கம்பர் கூறும்உவமை பிறரால் மாற்றற் கரியது. பிள்ளையின்றி இருந்த சோகத்தினும், பிள்ளை பெற்றிழக்கிற சோகம் பெரிதாகும்.

பின்னர், கைகேயி வரம் கேட்ட பொழுதும் தசரதனின் நிலையைக் கம்பர் நம்மனம் நெகிழ்வுறும் வகையில் உரைக்கிறார்.

"கண்ணே வேண்டு மென்னினும் மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேன்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறவென்றான்."

தசரதன் இதுபோல் இன்னும் பலவாறாகக் கைகேயியை நயந்து வேண்டிக் கொள்கிறான். இப்பாடல் விண்ணோரும், மண்ணோரும் போற்றும் படியாகப் பல ஆண்டுகள் பேராட்சி புரிந்த பெரிய அரசனின் வேண்டுகோளாக விளங்குகிறது. தசரதன் தன்னுடைய ஆட்சியிலே எத்தனையோ பேருக்குப் பயன்கருதாது மேகம் போல வரையாமல் வழங்கியிருப்பான். அத்தகைய நிலையில் வாழ்ந்த மன்னனை ஊழ், பாசம் இரண்டும் கைகேயியிடம் இரக்கும்படிச் செய்து விடுகின்றன. சாதாரண மனிதன் ஒருவன் தாழ்ந்து விட்டால் அவ்வளவு வருத்தம் தெரியாது. சிறந்த நிலையில் இருந்த ஒருவன் தன்னிலையினின்றும் தாழ்ந்து விட்டால்தான் அது மிகுதியாகப்படும். இதுபோலத்தான் தசரதனின் நிலையும்.

இனி அவலச்சுவைக்கு எடுத்துக் காட்டாக அகப்பாட்டிலிருந்து ஒன்றைக் காணலாம். நெய்தல் இரக்க வுணர்வையே

பொருளாகக் கொண்டதாகையால், அது கற்போரை மிகவும் துன்பத்தில் ஆழ்த்தும்.

தலைவன் வினைமேற்கொண்டு, போயிருக்கிருன். தலைவியோ அவன் செல்லும் வழியை நினைத்துக் கவல்கிருள். தலைவன் சென்ற கானம் மிக்கவெப்பமான தாயிருக்கிறது. தலைவி மேகத்தை நோக்கிக் கூறுகின்ருள் "ஏ மேகமே! என் தலைவன் போயிருக்கிற கானத்தில் வெப்பம் மிகுதியாய் எரிக்கின்றது. அவன் அங்கே வருந்துகின்றனன். இந்த நேரத்தில் நீ வெண்மேகமாயிருந்து என்ன பயன்? என் கண்களிலே (கணவனைப் பிரிந்ததன் காரணமாக) நீர் கடல்போல நிறைந்திருக்கிறது. ஆதலால் மேகக்கூட்டங்களாகிய நீங்களெல்லாம் என் கண்ணீர்க்கடலில் புகுந்து நீர் முகந்து சென்று, என் தலைவன் செல்லும் கடிய கானத்திடையே மழை பொழிந்து வெப்பத்தைத் தணிப்பீர்களாக" என வேண்டுகோள் விடுக்கிருள்.

"தாழ்பு துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கானம்
இறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானம்! சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்முக் குழீஇ முகந்து" (கலி. 145)

இப்பாடல் நமக்குத் துன்ப நினைவை யெழுப்பி, நம் உணர்வை அதன்கண் மயங்கச் செய்கிறது. இதுபோன்று இன்னும் பல பாடல்கள் இதன் கண்ணேயுள.

மணிவாசகப் பெருமானின் திருவாசகம் பக்திப் பாடலாக இருப்பதோடு, அகநூலாகவும் விளங்குகிறது. சங்க காலத்து அகப்பாடல்கள் எல்லாம் மனிதருடைய காதலைப்பற்றிக் கூறுகின்றன. ஆனல் திருவாசகமோ,மணிவாசகர் இறைவனிடத்திலே கொண்ட காதலைப்பற்றிக் கூறுகிறது. இதுதானே பேரின்பமும் வாழ்க்கையின் குறிக்கோளுமாகும். இவருடைய பாடல்கள் யாவுமே உள்ளத்தை உருக்குவன. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழி இதனுலன்றே எழுந்தது? இவர் பாடலைப் படித்தால் கல்மனம் படைத்தோரும் உள்ளம் வெதும்பிக் கண்ணீர் ததும்பி நிற்பர்.

"ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்(து) ஐம்புலனுய
சேற்றிலழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்பதென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

இவ்வுலகமாகிய சேற்றிலழுந்திக் கிடப்பது அவருக்குப் பெருந்துன்பமாக இருக்கிறது. அவரது தலைவனுகிய சிவனைச் சார்ந்து நிற்பதையே பெரிதும் விரும்புகிறுர். இப்பாடல் உள்ளத்தின் ஓலமாக விளங்குகிறது. திருவாசகம் முழுவதுமே இவ்வாறுதான். திருவாசகமாகிய தோணியால், அதனை உணர்ந்து படிப்போரெல்லாம் பிறவிப் பெருங்கடலை நீந்தி எல்லை யில்லா இன்பத்தில் திளைப்பர் என்பதில் ஐயமேது முண்டோ?

இவ்வாறுக அவலத்தையே அவலச்சுவையாக மாற்றிக் கற்போரை அதில் திளைக்க வைக்கும் புலவர்களின் திறனை என்னென்பது?

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

சிவ சிவ

உத்தரகோசமங்கையில்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி ரூ. 5,000/-

மாணிக்கவாசகரால் இறைவற்குரிய தசாங்கங்களுள் கீர்த்தித் திருவகவலில், 'பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன், உத்தரகோச மங்கையூ ராகவும்" என்று குறிக்கப் பெற்றதும்,

" மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தரறிந் திடநீத்தல் விண்ணப்பம் அறைந்த"

பதியாக விளங்குவதும்,

இறைவன் திருவுள்ளக் குறிப்பின்படி திருவாதவூரர் திருப்பெருந் துறையினின்று போந்து, திருவுத்தரகோசமங்கையை யடைந்து இறைவனது திருவுருவக் காட்சியைக் காணப்பெருது, உள்ள முருகி நீத்தல் விண்ணப்பம் என்னும் தொடைகெழு பாடலோத வித்தக வேடங்காட்டிய வரலாறு சொல்லப்படுவதும் ஆன உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்தில், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறெய்திய திருநாள் ஆகிய வைகாசி அமர பக்ஷம் திருதியையில் அந்தணர், அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம் பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது "உத்தரகோசமங்கையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி' என்று பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ.5,000/- ரூபா ஐயாயிரம். இது ஆண்டுதோறும் 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன்

லோன் ஆப் 1946 சர்க்கார் கடன்பத்திரம் எண். சிஏ. 225215- ரூ. 5,000/- இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. இம்முதற்பொருளின்று கிடைக்கும் வட்டித் தொகையில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய செலவு போக எஞ்சிய தொகை முழுவதும், மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பம் பாடியதலமாக விளங்குவதும், இராமநாதபுரத்துக்கு அணித்தாக இருப்பதுமான உத்தரகோசமங்கை என்னும் தலத்தில் ஸ்ரீகுமர குருபரசுவாமிகள் நினைவு நாளாகிய வைகாசி அமர பக்ஷம் திருதியை நாளில் ஆண்டுதோறும் அந்தணர் அருந்தவர் ஏழைகட்கு அன்னம்பாலித்தற் பொருட்டுப் பயன்படுத்தப் பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடத்தப்பெற்று வரும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் அரசினரால் திரும்பி யளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

"நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் – பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்." —திருவாசகம்–பண்டாயநான்மறை.

திருப்பனந்தாள், 6–2–1963. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 7-2-1963 as No. 6 of 1963 of Book 4 volume 50, pages 131 to 133.